**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 173/2019**
**U/s. 505(1)(b),353,506(2) IPC**
**PROSECUTION WITNESS NO. 3 (LW. 3)**

| | | |
|---|---|---|
| **Name** : அண்ணாதுரை | | |
| **Father's/Husband Name :** | **Occupation** : | |
| **Address** : | **Age** : **/2025** | |

**1,2,3** எதிரிகள் ஆஜர் இல்லை. **355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. விஜயபிரியா , பெஞ்ச் கிளார்க் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No. 173/2019 22.01.2026 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.29 FN**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தஞ்சாவூர் பள்ளி அக்ரஹாரத்தில் குடியிருந்து உதவி ஆய்வாளராக பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். நான் திருவோணம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 13.02.2019 ம் தேதி தஞ்சை மேற்கு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது உதவி ஆய்வாளர் தமிழ்செல்வி அவர்களுக்கு உதவியாக நானும், விஸ்வநாதன் சிறப்பு உதவி ஆய்வாளர், முதல் நிலை காவலர் நிறைமதி ஆகியோர்களுடன் தஞ்சை பழைய பேருந்து நிலையத்தில் ரோந்து சென்று கொண்டிருந்தபோது மக்கள் அதிகார அமைப்பை சேர்ந்த ராஜன் என்கிற ராஜேந்திரன், மதுரைவீரன் , பால்ராஜ் ஆகிய மூவரும் ஆளுக்கொரு உருட்டுகட்டையை வைத்துகொண்டு பொதுமக்களுக்கு கலங்கம் ஏற்படும் வகையில் துண்டு பிரசுரம் செய்து கொண்டு அரசாங்கத்திற்கு அடிமையாக ஜனநாயகம் என்ன என்று சொல்லியும், கார்ப்ரேட் , காவி , பாசிசம் நிறுத்தநில் என்று சொல்லி கோஷம் போட்டு கொண்டிருந்தார்கள். அப்போது உதவி ஆய்வாளர் அரசாங்கத்திற்கு எதிராக கோஷம் போடதீர்கள் என்று சொல்லி கொண்டிருந்தபோது மூவரும் உதவி ஆய்வாளரை பார்த்து நீங்கள் கிட்டக்க வந்த உங்களை தீ வைத்து கொளுத்தி விடுவேன் என்று மிரட்டினார்கள். மூவரையும் உதவி ஆய்வாளர் காரணம் கூறி 13.15 மணிக்கு கைது செய்தார்கள். அந்த இடத்தில் எதிரிகள் மூவரையும் வைத்திருந்த உருட்டு கட்டைகள் , துண்டு பிரசுரம் ஆகியவைகளை கைப்பற்றி 13.30 மகசர் தயார் செய்தார்கள். அந்த மகசரில் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் விஸ்வநாதன் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். எதிரிகள் மற்றும் தடயத்துடன் காவல்நிலையம் கொண்டு வந்து தஞ்சை மேற்கு காவல்நிலைய குற்ற எண் 100/2019 சட்டபிரிவுகள் 505(2)(b),353,506(ii) இதசவின் படி

வழக்கு பதிவு செய்யப்பட்டது. உதவிஆய்வாளருக்கு நாங்கள் உதவியாக இருந்தோம்.என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அசாஆ 1 ஆககுறியீடு செய்யப்படுகிறது.** உதவி ஆய்வாளர் எங்களை விசாரித்த போது நாங்கள் நடந்த விவரத்தை சொன்னோம்.

**<u>1,2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**1.** சம்பவயிடமானது பொதுமக்கள் கூட்ட நெரிசல் மிகுந்த பகுதி என்றால் சரிதான். அங்கு சுமார் நூற்றுகணக்கான மக்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். பொதுமக்கள் எவரேனும் தங்களுக்கு களங்கம் ஏற்பட்டதாக புகார் எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. இந்த சம்பவம் தொடர்பாக பொதுமக்கள் எவரேனும் சாட்சிகளாக போட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும். சம்பவயிடமானது பழைய பேருந்து நிலையம் கும்பகோணம் நடைமேடையா என்றால் நடைமேடை அருகில் நடந்தது. நடைமேடையில் அருகில் கடைகள் மற்றும் TNSTC அலுவலகம் உள்ளது என்றால் கடைகள் உள்ளது. அலுவலகம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. அதில் எந்த கடைக்கு எதிராக சம்பவம் நடந்ததா என்றால் ஞாபகமில்லை. அந்த நடைமேடையில் போக்குவரத்து கழக சேவை மையம் உள்ளது என்றால் ஞாபகமில்லை. சம்பவயிடத்திற்கும் மேற்கு காவல்நிலையத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1 1/2 கிலோமீட்டர் இருக்கும். சம்பவத்தின்போது எதிரிகள் யாரையும் தாக்கவில்லை , தீ வைத்து கொளுத்தவும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவயிடமானது எந்த வழிதடத்தில் நடந்தது என்று சொல்லமுடியுமா என்றால் ஞாபகமில்லை.

2. எதிரிகளிடமிருந்து தீ வைப்பதற்குரிய பொருள்கள் எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை . வாய்மொழியாக மிரட்டினார்கள். எனது முதல் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் எந்த எதிரி யாரை நோக்கி என்ன வார்த்தை கூறி மிரட்டினார் என்று குறிப்பிட்டு சொல்லிருக்கிறார்களா என்றால் எனக்கு தெரியாது. மூவரும் தான் செய்தார்கள். சம்பவயிடத்தில் தனி நபர்கள் எவரும் சாட்சிகளாக இருக்க முன்வரவில்லை என்பதால் தான் நான் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சம்பவயிடத்தில் தான் தயார் செய்யப்பட்டது. அதன் பிறகு தான் காவல்நிலையத்திற்கு சென்று வழக்கு பதியப்பட்டது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் ரோந்திற்கு சென்றபோது உடன் எடுத்து சென்றோமா என்றால் எடுத்து சென்றோம். முதல் விசாரணையில் அரசாங்கத்திற்கு அடிமையாக ஜனநாயகம் என்ன என்று எதிரிகள் முழக்கமிட்டதாக சொல்லியுள்ளேன் என்றாலும் , என்னை உதவி ஆய்வாளர்

விசாரித்தபோது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரிகளை கைது செய்தநேரம், வழகககு பதிவு செய்யப்பட்ட நேரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரிகள் அனைவரும் வெளிமாவட்டத்தை சேர்ந்த நபர்களா என்றால் சரிதான்.

3. சம்பவயிடத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. பொதுமக்கள் கூடும் முக்கியமாக இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் எங்கள் துறையால் பொருத்தப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. எதிரிகளிடம் கைப்பற்றபட்டதாக கூறப்படும் துண்டறிக்கை மற்றும் உருட்டுகட்டைகளின் எண்ணிக்கை தெரியுமா என்றால் 3 உருட்டுகட்டைகளும், சுமார் 100–150 துண்டறிக்கைகள் இருக்கும் . எதிரிகள் பிரச்சார செய்துகொண்டிருந்தார்கள் என்ற தகவலின் பேரில் நாங்கள் சம்பவயிடத்திற்கு சென்றோமா என்றால் நாங்கள் வழக்கமான ரோந்திற்கு சென்றோம் . எதிரிகள் கைது செய்யப்பட்ட பிறகு மேலதிகாரியின் உத்தரவை பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அது குறித்து உதவி ஆய்வாளருக்குதான் தெரியும். நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அரசின் அறிவுறுத்தலின் பேரில் எதிரிகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் சம்மந்தமாக என்னை விசாரித்தது உதவி ஆய்வாளர் என்றாலும் அவர் பெயர் கூறமுடியுமா என்றால் அவரது பெயர் திருமதி. E.K. தமிழ்செல்வி. கைப்பற்றுதல் மகசரில் என்னுடன் கையெழுத்து செய்த விஸ்வநாதன் என்பவரையும் ஒரே நேரத்தில்தான் விசாரணை செய்தார்களா என்றால் சரிதான். அவரையும் உதவி ஆய்வாளர் திருமதி. E.K. தமிழ்செல்வி என்பவர் தான் விசாரித்தார் என்றால் சரிதான். எதிரிகளுக்கு இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.